அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 2/89

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
11 ஜனவரி, 1989.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள்
அதிகரிப்பு 11 டிசம்பர் 1987ஆம் தேதிய 387ஆம்
இலக்கச் சுற்றறிக்கைக்கான திருத்தம்.

01 ஜனவரி 1989ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் 16-05-1988 ஆம் தேதிய 387 (11) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 387 ஆம் இலக்க 11-12-1987 ஆம் தேதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 17ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படுகிறது.

"17 விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியக் கழிப்பனவுகள் :- கழிப்பனவு வீதங்கள் பின்வருமாறு அமையும்.

| 1988 புதிய திரட்டிய சம்பளங்கள் ( ஆண்டொன்றுக்கு ) | |
|---|---|
| 16,800 ருபா வரை | 3%(மூன்று) |
| 16,801 ருபாவிலிருந்து 25,800 ருபா வரை | 5%(ஐந்து) |
| 25,801 ருபாவும் அதற்கு மேற்பட்ட தொகையும் | 6%(ஆறு) ," |

02. தாபனக் கோவையின் 11ஆம் அத்தியாயத்தின் 12.2.1 ஆம் பிரிவும் அதற்கேற்ப திருத்தப்படுகிறது.

03. இச்சுற்றறிக்கையானது பொதுத் திறைச்சேரியின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம். சிறில் கமகே,
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.